ஐயா RADIO LISTENER, CHENNAI

தாமஸ் அவர்கள் எமது வானொலி நேயர்




ஒவ்வொரு வாரமும் தவறாது கேட்கிறார்

நீங்களும் கேட்டு பயன்பெறுங்கள்

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Posted at Batlagundu Post office on 10 th Mar. 2015

*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M

**To**

If Undelivered Kindly Return to

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 15 | மார்ச் 2015 | கனி 4




THE WORD OF CHRIST

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக" – கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradhana TV:**
Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 p.m **on Rakshana TV:**
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.15 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Sunday 10.00-10.30 p.m and Monday 7.00-7.15 a.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on ShubhSandesh Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*


**THE WORD OF CHRIST**
Monthly Magazine

**Editor**
**B.ARJUNAN**
**Associate Editor**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்தியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழின் உள்ளே...


ஆசிரியருரை
ஜெ.சி.சோட்,
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட்ஸ்
அவர்களின் வேதபாடம்,
சகோ.ராஜாமணி
அவர்களின் செய்தி
வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி
மற்றும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 175

### போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்பவும். விடை மே மாத இதழில்.

1. **ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு, நீங்கள் விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும் என எந்த சபையாருக்கு பவுல் எழுதுகிறார்?**
2. **பேயோரின் அக்கிரமத்தால் கர்த்தருடைய சபையிலே என்ன உண்டாயிருந்தது?**
3. **பவுல் தன் நிருபத்தில் எது அடையாளம் என்கிறார்?**
4. **யாருடைய பெண்சாதி அவனுடைய தோழரில் அவனோடே சிநேகமாயிருந்த ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாள்?**
5. **விவாகம்பண்ணாதிருக்கவும், விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கும்படி தேவன் படைத்ததை விலக்கவும் வேண்டுமென்று எவர்கள் கட்டளையிடுவார்கள்?**
6. **கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணிக்கப்பட்ட ராஜா யார்?**
7. **கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக என யார் யாருக்கு எழுதுவது?**
8. **தாவீது எப்ரோனிலே யூதா கோத்திரத்தின்மேல் ராஜாவாயிருந்த நாட்களின் இலக்கம் எத்தனை?**
9. **எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்கதாக எது பிரசன்னமாகியுள்ளது?**
10. **வனாந்தரத்தில் ஒருநாள் பிரயாணம்போய், ஒரு சூரைச் செடியின்கீழ் உட்கார்ந்து தான் சாகவேண்டுமென்று கோரிய தீர்க்கன் யார்?**

- கிரேக்கத்தில் கெத்சமணி என்றழைக்கப்பட்டது. கெத்சமனே என்பதற்கு எண்ணை ஆலை என்பது பொருள்.
- இயேசுவானவர் ஜெபிக்கச் சென்ற இடம் - மத்.26:36
- ஆண்டவர் வழக்கமாக தமது சீஷர்களுடன் செல்லக்கூடிய இடமாகவும் இருந்தது - லூக்.22:29
- 2000 ஆண்டுகளுக்குமேல் உள்ள ஆலிவ் மரங்கள் அங்கிருந்தன.
- ஜொசிபஸ் அறிக்கையின்படி எருசலேமில் கி.பி.70-ல் தீத்துவின் ஆட்சிகாலத்தில் 20 கி.மீட்டர் சுற்றளவுக்குள் இருந்த ஆலிவ் மரங்கள் அனைத்தும் வெட்டப்பட்டன எனக்கருதப் படுகிறது.
- யூதாஸ் இந்த இடத்தை அறிந்திருந்தான் - யோவா.18:2
- யோவான் 18:1-ன்படி இந்த கெத்சமனே தோட்டம் ஒலிவமலையின் அடிவாரத்தில் இருந்தது.



| | |
|---|---|
| 1. Place of Publication | - Batlagundu. |
| 2. Periodicity of its Publication | - Monthly. |
| 3. Printer`s Name | - R.Sathiyamoorthi |
| 4. Address | - 14/13/24 Melamanthai St Batlagundu -624 202, Dindigul Dt, Tamilnadu. |
| 5. Whether citizen of India | - Yes. |
| 6. Publisher`s Name | - B.Arjunan |
| 7. Address | - 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu - 624 202, Dindigul Dt., Tamilnadu. |
| 8. Editor`s name | - B.Arjunan |
| 9. Address | - 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu - 624 202, Dindigul Dt., Tamilnadu. |

I, B.Arjunan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

sd

Date::28.02.2015 Signature of Publisher.

தெரிந்து கொள்வோம்

## ஒட்டகம்

- K.R.K.Ravi Asir
Associate Editor



- ஒட்டகப் பாலை நாம் அருந்தலாம்.
- ஒட்டகம் ஒரு மைலுக்கு அப்பால் தண்ணீர் இருந்தாலும் அதை அறியும்.
- ஒட்டகம் உப்பு நீரை விரும்பி அருந்தும்.
- ஒட்டகத்திற்கு நீந்தத் தெரியாது.
- ஒட்டகம் அரபு நாடுகளின் தேசிய சின்னம்.
- ஒட்டகம் ஏறக்குறைய 10 லிட்டர் தண்ணீரைக் குடிக்குமாம்.
- ஒட்டகம் எவ்வளவு தூரம் வெயிலில் நடந்தாலும் அதற்கு வியர்க்காது.
- ஒட்டகத்தில் பதினைந்து வகைகள் உள்ளன.
- ஒட்டகம் என்ன பசியானாலும் மாலை 6மணிக்குமேல் இரைதின்னாது.
- ஒட்டகம் 300 கிலோ எடையை சுமந்து செல்லும் பேராற்றல் பெற்றது.
- ஒட்டகத்தின் பால் கறந்தவுடன் கெட்டியாகிவிடும்.
- ஒட்டகம் இறந்துகிடப்பதை மற்ற ஒட்டகம் பார்த்தால் அதுவும் இறந்துவிடும்.




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 15 மார்ச்-2015 கனி - 4


ஆசிரியருரை

## அநேகருடைய அன்பு தணிந்துபோம்
### The Love of Many Will Grow Cold



அநேகருடைய அன்பு தணிந்துபோவதற்கு காரணம் என்னவென்றால். உலகத்தில் அக்கிரமம் மிகுதியாவதினால் அன்பு தணிந்துபோகிறது. நல்லவர்களும் மோசமானவர்களாக மாறிவிடுகின்றனர். நேற்றுவரை அவர் நல்லவராகத்தானே இருந்தார் இன்று எப்படி இப்படியொரு காரியத்தை செய்துவிட்டார் என்று பலர் சொல்லக் கேள்விபட்டிருக்கிறோம். அந்த மனிதனுடைய வாழ்க்கையில் தாங்கமுடியாத ஏதோ ஒரு சம்பவம் நடந்திருக்கிறது ஆகையால் அவர் இவ்விதமாக மாறிவிட்டார் என்பார்கள். இது சரி என்று நாம் சொல்லி விடமுடியாது. அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்து போகும், உண்மைதான். வேதமும் அவ்வாறே சொல்லுகிறது "அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்போம்" என்று (மத்.24:12).அன்பு தணிந்துபோகாதிருக்க நாம் கர்த்தரைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டுமல்லவா? நீங்கள் அவ்விதமாக உங்களுக்கு வரக்கூடிய பாடுகள் பிரச்சனைகளில் கர்த்தரைப் பற்றிக்கொண்டிருக்கிறீர்களா?

நோவா என்ற தேவ மனிதனை அறிவீர்கள். அவனுடைய காலத்தில் அக்கிரமம் பூமியில் பெருகினது. "மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது" (ஆதி.6:5,6). உலக காரியங்களைப் பார்த்து அநேகர் வேதனை கொள்ளுகின்றனர். நோவா காலத்து மனிதர்களை கண்ட கர்த்தருக்கும் மனவேதனை உண்டானது. தாம் பூமியிலே உண்டாக்கின மனிதனுக்காக அவர் வேதனை கொண்டார். இன்று இருக்கிற நமக்கு மிகுந்த வேதனையை கொண்டுவருகிறது. ஆகையால் அநேகருடைய அன்பு தணிந்துபோகிறது. அந்நாட்களில் வாழ்ந்த நோவாவுக்கு எவ்வளவு மனவேதனை இருந்திருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். அவன் தன் காலத்திலே இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான் என அவனைக்குறித்து படிக்கிறோம். அவனுக்கும் அநேகருடைய அக்கிரம கிரியைகளைக்

கண்டு அன்பு குறைந்திருக்கும். ஆனாலும் அவன் கர்த்தரையே தஞ்சமாக கொண்டிருந்தபடியால் கர்த்தருடைய கண்களில் நோவாவுக்கு கிருபை கிடைத்தது. அவன் அந்த அன்பிலே பெலப்பட்டு கர்த்தருடைய வார்த்தையின்படி ஒரு பேழையை உண்டுபண்ணி தன்குடும்பத்தை இரட்சித்தான். இந்நாட்களில் வாழ்கின்ற நாமும் நம்மில் அன்பு குறைந்து போகாதிருக்க கர்த்தரையும் அவருடைய வல்லமையுள்ள வசனங்களையும் பற்றிக்கொண்டிருப்போம். "நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்" என்ற எபே.5:16-ல் சொல்லப்பட்ட வசனத்தின்படி காலத்தை நாம் பிரயோஜனப்படுத்திக்கொள்ளவேண்டும். நாளை நம்முடைய நாள் அல்ல. இன்றே இரட்சணிய நாள். ஒரு நாள் பிறப்பதை நாம் அறியோம். கர்த்தர் ஒருவரே அறிவார். ஆகையால் ஒவ்வொரு நாளும் நம்முடைய ஆத்துமாவை பாதுகாத்துக்கொள்ள ஆவியில் அனல்உள்ளவர்களாயிருப்போம்.

"அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் அவர்களுடைய காமவிகார நடக்கையால் வருத்தப்பட்டு, நாள்தோறும், அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க; கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்" (1பேது.2:7-9). நாம் வாழும் நாட்டிலும் அக்கிரமம் இல்லாமல் இல்லை. ஒவ்வொருநாளும் லோத்துவைப்போல வேதனைப்படுகிறோம். அக்கிரமக்காரருக்குள்ளே வாசமாயிருக்கிறோம். லோத்தை இரட்சித்த கர்த்தர் நம்மையும் இரட்சிக்க வல்லவராயிருக்கிறார் என்ற நம்பிக்கையோடு அன்பிலே நிலைத்திருக்கவேண்டும். அன்பு எப்பொழுது தணிந்துபோகிறது என்று நாம் பார்க்கும்போது நம்முடைய கோரிக்கைகள் நிறைவேறாத சமயங்களில் நம்முடைய அன்பு தணிய ஆரம்பிக்கிறது அல்லது நம்முடைய எதிர்பார்ப்பு நிறைவேறாத சமயங்களில் அன்பு தணிந்துபோகிறது.


யோனாவை தேவனாகிய கர்த்தர் நினிவே பட்டணத்திற்கு அனுப்பினார். யோனா நகரத்தில் பிரவேசித்து ஒரு நாள் பிரயாணம்பண்ணி, இன்னும் நாற்பது நாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று கூறினான். அதன்பின்பு நினிவேக்கு நடக்கப்போகும் சம்பவத்தைப் பார்க்க "யோனா நகரத்திலிருந்து புறப்பட்டு, நகரத்துக்குக் கிழக்கே போய், அங்கே தனக்கு ஒரு குடிசையைப் போட்டு, நகரத்துக்குச் சம்பவிக்கப்போகிறதைத் தான் பார்க்குமட்டும் அதின் கீழ் நிழலில் உட்கார்ந்திருந்தான்... கர்த்தர் ஒரு ஆமணக்குச் செடியை முளைக்கக் கட்டளையிட்டு, அதை அவன் மேல் ஓங்கிவளரப்பண்ணினார்; அந்த ஆமணக்கின்மேல் யோனா மிகவும் சந்தோஷப்பட்டான். மறுநாளிலே கிழக்கு வெளுக்கும் நேரத்தில் தேவன் ஒரு பூச்சியைக் கட்டளையிட்டார்; அது ஆமணக்குச்செடியை அரித்துப் போட்டது; அதினால் அது காய்ந்துபோயிற்று. சூரியன் உதித்தபோது தேவன் உஷ்ணமான கீழ்க்காற்றைக் கட்டளையிட்டார்; அப்பொழுது வெயில் யோனாவுடைய தலையில் படுகிறதினால் அவன் சோர்ந்துபோய், தனக்குள்ளே சாவை விரும்பி; நான் உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்றான்; அப்பொழுது தேவன் யோனாவை நோக்கி: நீ ஆமணக்கினிமித்தம் எரிச்சலாயிருக்கிறது நல்லதோ என்றார்; அதற்கு அவன்; நான் மரணபரியந்தமும் எரிச்சலாயிருக்கிறது நல்லதுதான் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ பிரயாசப்படாததும், நீ வளர்க்காததும், ஒரு இராத்திரியிலே அழிந்துபோனதுமான ஆமணக்குக்காகப் பரிதபிக்கிறாயே, வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம்பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருகஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான்



சிறுவர் பகுதி

# எட்டு வயதில் ராஜாவான யோசியா

*வேதபகுதி: 2 நாளாகமம்34:1-35:27*



தம்பிகளா நீங்க எட்டு மாதத்திலே எட்டு வச்சிருப்பீங்க. எட்டு வயதிலே 80 வயது நிறைந்தவர்களுடைய வார்த்தையையும் புறம்பே தள்ளுவீங்க அப்படித்தானே? ஆனா! யோசியா ராஜா அப்படியல்ல எட்டு வயதில் ராஜாவாகி கர்த்தருடைய பார்வையில் செம்மையாக ஆட்சி செய்தான். ஆனா, கடைசி நாட்களில் தேவ வார்த்தைக்கு செவி கொடாமல் போய்விட்டான்.

அவன் தன் ராஜ்யபாரத்தின் எட்டாம் வருஷத்திலே தன் தகப்பனாகிய தாவீதின் தேவனைத்தேட ஆரம்பித்தான் அப்பொழுது அவனுக்கு வயது 16 இருக்கும். பிரசங்கி சொல்வது போல வாலிப பிராயத்திலே தன் சிருஷ்டிகரை நினைக்க ஆரம்பித்தான். பன்னிரண்டாம் வருஷத்தில் சகல விக்கிரகங்களையும் அழித்துப் போட்டான். இப்படியே அவன் வயது அதிகரிக்க அதிகரிக்க தன் ராஜ்யத்தை சிறப்பாக கொண்டு சென்றான். தன் ராஜ்யத்தின் பதினெட்டாம் வருஷத்தில் தன் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தைப் பழுது பார்க்கும்படி ஆட்களை நியமித்தான். ஆலயத்திலே கண்டெடுக்கப்பட்ட உடன்படிக்கைப் புஸ்தகத்தின் வார்த்தைகளையெல்லாம் வாசித்து கர்த்தரைப் பின்பற்றி நடப்பேன் என்றும், தன் முழுஇருதயத்தோடும் தன் முழு ஆத்துமாவோடும் அவருடைய கற்பனைகளையும், அவருடைய சாட்சிகளையும், அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்ளுவேன் என்றும் கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கை பண்ணினான். அதேபோல பஸ்கா பண்டிகையை நல்ல விதமாக அநுசரித்தான். இதைக்குறித்து நாம் பரிசுத்த வேதாகமத்தில் படிக்கும் போது "தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் நாள் தொடங்கி, இஸ்ரயேலிலே இப்படிப்பட்ட பஸ்கா ஆசரிக்கப்படவில்லை என்று படிக்கிறோம்" இப்படியெல்லாம் சிறப்பாக ஆட்சி செய்த ராஜா என்னவானான் தெரியுமா?

கடைசி நாட்களில் நேகோ என்ற எகிப்தின் ராஜா சொன்ன தேவனுடைய வார்த்தைக்கு செவி கொடாமல் அவனோடு யுத்தம் செய்ய புறப்பட்டு வில்வீரர்களால் அம்பெய்து மரணமடைந்தான். இந்த யோசியா ராஜாவைப்போல நீங்களும் சிறு பிராயத்தில் வேதாகமத்தில் சொல்லப்பட்ட முற்பிதாக்களின் நல் வழியை தெரிந்துகொண்டு சபையை கட்டுவதற்கு ஒத்துழைப்பாக இருக்கவேண்டும். யோசியா ராஜா பஸ்கா பண்டிகையை சிறப்பாக அநுசரித்ததுபோல நீங்களும் வாரந்தோறும் சபைக்குச் சென்று வயது வரும் போது திருமுழுக்குக்கு எடுத்த பின்பு கர்த்தருடைய பந்தியை சிறப்பாக அநுசரிக்கவேண்டும். ஆனால் ஒன்று எட்டு வயது முதல் சிறப்பாக ஆட்சி செய்து கர்த்தருக்குப் பிரியமாக வாழ்ந்து கடைசி நாட்களில் தேவ வார்த்தைக்கு செவி கொடாமல் போன இந்த யோசியாவைப்போல நீங்களும் போய்விடக்கூடாது.

**மனப்பாட வசனம்:**

**"ஞானத்தைச் சம்பாதி, புத்தியையும் சம்பாதி; என் வாயின் வார்த்தைகளை மறவாமலும் விட்டு விலகாமலும் இரு" நீதிமொழிகள்4:5**

## கிறிஸ்துவுக்குள் நாம் பெற்றிருக்கிறோம்...
## In Christ We Have...

ஒரு வாழ்வு அது ஒருபோதும் மரிக்காதது;
ஒரு அன்பு அது ஆழம் அறியமுடியாதது;
ஒரு மகிமை அது ஒருபோதும் மந்தாரமடையாதது;
ஒரு அழகு அது ஒருபோதும் பழுதடையாதது;
ஒரு ஒளி அது ஒருபோதும் இருளடையாதது;
ஒரு பரிசுத்தம் அது ஒருபோதும் அசுத்தமடையாதது;
ஒரு மகிழ்ச்சி அது ஒருபோதும் குறையாதது;
ஒரு சமாதானம் அது ஒருபோதும் புரிந்து கொள்ளக்கூடாதது;
ஒரு நம்பிக்கை அது ஒருபோதும் ஏமாற்றமடையாதது;
ஒரு வலிமை அது ஒருபோதும் பலவீனமடையாதது;
ஒரு சந்தோஷம் நிறைந்தது அது ஒருபோதும் தடையில்லாதது;
ஒரு நேர்மை அது ஒருபோதும் களங்கமில்லாதது;
திரவ சம்பத்துக்கள் அது ஒருபோதும் செலவழியாதது

வேதப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறவன் விவேகமுள்ள புத்திரன்
நீதிமொழிகள் 28:7



ஜெபியுங்கள்

- மார்ச் மாதத்தைக் காணசெய்த தேவனுக்கு நன்றி சொல்லி...
- ஏப்ரல் மாதம் 6, 7 தேதிகளில் நடைபெறும் வேதாகம பள்ளிக்காக...
- வானொலி ஊழியங்களுக்காக...
- தொலைக்காட்சி ஊழியங்களுக்காக...
- மாவட்ட ஊழியங்களுக்காக...
- உலக சமாதானத்திற்காக...
- பரீட்சை எழுதும் மாணவ, மாணவிகளுக்காக...



தேவ செய்திகள் அடங்கிய CD & DVD எங்களிடம் உள்ளது ரூ.100/- அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள் உங்கள் முகவரி மற்றும் மொபைல் எண்ணை SMS பண்ணவும். **9443558041**






பரிதபியாமலிருப்பேனோ என்றார்" (யோனா 4:5-11). அன்பானவர்களே, நாம் நினைத்தது நடக்கவில்லை என்று வருந்துகிறோம் பரிதபிக்கிறோம். இதனால் மனமுடைந்து இருப்பதைக் காட்டிலும் சாவதே மேல் என்று முடிவுக்கும் வந்துவிடுகிறோம். நாம் சற்று சிந்திக்கவேண்டும். அண்ட சராசரங்களையும் ஆண்டுபோஷிக்கும் கர்த்தர் எல்லோரையும் நேசிக்கிறார். ஒருவரும் கெட்டுப்போவது அவருடைய விருப்பமல்ல. இதை நாம் புரிந்துகொண்டு தேவசித்தம் செய்யவேண்டுமல்லவா? கர்த்தருடைய வழியைவிட்டு தர்ஷீசுக்கு போன யோனாவுக்கு சரியான பாடம் புகட்டி நினிவேக்கு அனுப்பினார். அங்கும் அவன் அவர்களுடைய அழிவை காணும்படியாக எதிர்பார்த்து காத்திருந்தபோது, மீண்டும் ஒரு பாடத்தை அவனுக்கு புகட்டினார். அன்பானவர்களே, நமக்குள் சோர்வு வரும்போது அன்பு குறைந்துபோய் நற்கிரியைகளை செய்ய தவறிவிடுகிறோம். "ஆவியை அவித்துப்போடாதிருங்கள்" என 1தெச.5:19-ல் படிக்கிறோம். நாம் அனலுள்ளவர்களாக இருந்து கர்த்தருக்காக பெரிய காரியங்களைச் செய்யவேண்டும். மேலும், "பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர் களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம்" (1தெச.5:8). வேதாகமம் தேவனுடைய மக்களை பகலுக்குரியவர்கள் என்று அழைக்கிறது. இரவுக்குரியவர்கள் இரவிலே பலருக்கு விரோதமாக சதித்திட்டங்களை தீட்டுவார்கள். நாமோ நற்கிரியைகளைச் செய்யும்படியாக அழைக்கப்பட்டவர்களாயிருக்கிறோம். ஆகையால் நம்மை பகலுக்குரியவர்கள் என வேதம் அழைக்கிறது. இந்த அழைப்புக்குப் பாத்திரவான்களாக இருந்து செயல்படுவோம். ஊழியம் என்பது அது அற்புதவிதமானது. அதற்கு மாதிரியை நம்முடைய கர்த்தர் வைத்து சென்று இருக்கிறார். அவர் ஊழியம் கொள்ளும்படியாக வராமல் ஊழியம் செய்யவும் அநேகரை மீட்கவும் வந்தார். அதைப்போல நாமும் ஒவ்வொரு நாளும் ஊழியம் செய்யவேண்டும். "சகோதரரே நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்த சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்" என பவுல் ஆலோசனை சொல்லுகிறார் (கலா.5:13). ஊழியம் என்பது அது அன்பினாலே செய்யப்படவேண்டும். கட்டாயத்தின்பேரிலோ அல்லது வற்புறுத்தலின்பேரிலோ செய்வதல்ல. ஆண்டவரின் மீது நாம் கொண்டுள்ள அன்பினாலே செய்யவேண்டும். அவர் நமக்காக சிலுவையில் இரத்தம் சிந்தியிருக்கிறார். நாம் அவருக்காக என்ன செய்யப்போகிறோம். அன்பிலே பயமில்லை, பொறாமையில்லை, வண்கணில்லை, அன்பு சகலத்தையும் நம்பும் சகிக்கும். இந்த அன்பு தணிந்துபோய் விடாது பார்த்துக்கொள்ளுங்கள்.

அன்பு தணிந்துபோகாமல் தன்னைப் பாதுகாத்து, "முடிவு பரியந்தமும் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்" என திருமறையில் காண்கிறோம் (மத்.24:13). ஒரு துவக்கத்தைக் காட்டிலும் முடிவு நல்லது. ஒரு காரியத்தை செய்ய துவங்கிவிடலாம் ஆனால் முடிவுபரியந்தமும் நிலைத்திருந்து அதை செய்து முடிக்கவேண்டும். அதுவே அதன் தனிச்சிறப்பு. ஞானஸ்நானம் பெற்று விடுகிறார்கள். ஆனால் முடிவுபரியந்தமும் சபையில் நிலைத்திருந்து கர்த்தருடைய கட்டளைகளை நிறைவேற்றுகிறார்களா? இல்லை. அநேகர் பின்வாங்கிப்போய்விடுகிறார்கள். அவர்களால் நிலைத்திருக்கமுடியவில்லை. இயேசுவின் மீது கைபோட்டவுடன் எல்லா சீடர்களும் அவரைவிட்டு ஓடிப்போய்விட்டார்கள். ஆனால் யோசேப்பு என்று சொல்லப்பட்ட அந்தரங்க சீஷன் அவர் சிலுவையில் மரித்து தொங்கிக்கொண்டிருக்கும்போது; "அவன் பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டு அதை இறக்கி, மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, கன்மலையில்

வெட்டப்பட்டதுமாய் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்படாதுமாயிருந்த ஒரு கல்லறையிலே வைத்தான்" (லூக்.23:52,53). இவன் தேவனுடைய ராஜ்யத்துக்குக் காத்திருந்தவனும் யூதர்களுடைய ஆலோசனைக்கும் செய்கைக்கும் சம்மதியாதவனுமாயிருந்தான் என காண்கிறோம். அந்நாட்களில் யூதர்களாலே ஆண்டவர் இயேசுவுக்கு இத்தனை பாடுகள் நடந்தது. அந்த யூதர்களுடைய ஆலோசனைக்கும் செய்கைக்கும் சம்மதியாதவனாயிருந்து துணிந்து இயேசுவின் சரீரத்தைப் பெற்று அதை அடக்கம்செய்தான். இவனுடைய அன்பு தணிந்துபோகவில்லை. எதைக்குறித்தும் பயப்படவில்லை. அந்நாட்களில் இயேசுவை சிலுவையில் அறைந்து கொன்றதைப்போல நம்மையும் கொன்றுபோடுவார்கள் என்ற பயம் எல்லோருக்குள்ளும் இருந்தது. ஆனாலும் இந்த யோசேப்பு பயப்படாமல் இக்காரியத்தை செய்தான். இவன் கிறிஸ்துவினுடைய போதனையில் நிலைத்திருந்த ஒரு சீஷனாக காணப்பட்டான். அன்பானவர்களே, ஆபத்தைக் கண்டு ஓடுவதோ, அல்லது மறுதலிப்பதோ ஒரு சீஷனுக்கு அழகல்ல. நாம் பெற்றுக்கொண்ட சத்தியத்திற்காக போராட வேண்டியவர்களாயிருக்கிறோம். மாற்.4:17-ல் சொல்லப்பட்டபடி "தங்களுக்குள்ளே வேர்கொள்ளாதபடியால், கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருக்கிறார்கள், வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைகிறார்கள்; இவர்களே கற்பாறை நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள்". நீங்கள் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறீர்கள். யோசேப்பைப்போல துணிவுள்ளவர்களாய் இருக்கிறீர்களா? அல்லது ஆண்டவர் மீது கைபோட்டவுடனே அவரை விட்டு ஓடிப்போன சீடர்களைப்போல இருக்கிறீர்களா? பவுல் சொல்லுகிறார்; "நல்ல போராட்டத்தைப் போராடினேன்; ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" என்கிறார் (2தீமோ.4:7). அன்பு தணிந்துபோகாமல் காத்துக்கொண்டு பவுல் தன்னுடைய ஓட்டத்தை முடித்தார். ஆகையால் அவருக்கு நீதியின் கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறதாக எழுதுகிறார். அவருக்கு மாத்திரமல்ல கர்த்தருடைய பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் என எழுதுகிறார். அந்த நீதியின் கிரீடத்தை பெற்றுக்கொள்ளத்தக்கதாக நல்ல போராட்டத்தை இவ்வுலகத்தில் போராடி உங்களுடைய ஓட்டத்தை முடிக்க முயற்சி எடுங்கள்.

**அன்பு ஒழிந்துபோகுமா?**

உலகத்தில் உள்ள எல்லாமே ஒரு நாள் அழிந்துபோகும். ஆனால் "அன்பு ஒருக்காலும் ஒழியாது தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்" என 1கொரி.13:8-ல் காண்கிறோம். ஒழிந்துபோகாத அன்பை யாராலும் அழிக்கமுடியாது இந்த அன்பிலே நிலைத்திருங்கள். "அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல" (1யோவா.4:18). தேவன் அன்பாகவே இருக்கிறார். ஆனபடியாலே அவர் எல்லோரையும் நேசிக்கிறார். அந்த அன்பிலே தணிந்துபோகாதிருந்து, உங்களுக்கு கிடைக்கும் சமயத்திற்கு தக்கதாக யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மைசெய்யுங்கள். உங்களுடைய நன்மை ஒருநாளும் வீணாய் போவதில்லை. அவருடைய ஜீவபுஸ்தகத்தில் அவைகள் எழுதப்படுகின்றன. அதற்கேற்ற கூலியை கர்த்தர் உங்களுக்கு கொடுப்பார். அன்பில்லாதவன் தேவனை அறியான் என வேதம் சொல்லுகிறது. ஆகையால் ஒழிந்துபோகாத அந்த அன்பிலே நிலைத்திருங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

"ஆட்டுமந்தையைப்போலப் பாதாளத்திலே கிடத்தப்படுகிறார்கள்; மரணம் அவர்களை மேய்ந்துபோடும்" சங்கீதம் 49:14



# "நன்றிக்கேடு – நன்றன்று"

*-Slected*

நோய்களை யாரும் வரவேற்பதில்லை அவைகளும் வரவேற்பை எதிர்பார்ப்பதில்லை! ஆனால் இந்த அழையா விருந்தாளிகள் நம்மை எவ்வளவு பாடு படுத்தி விடுகின்றன! ஆவிக்குரிய நோய்களும் அப்படியே! அவற்றிலொன்றான "நன்றி-கேடு-நன்றல்ல" என்பதைப்பற்றி தியானிப்போம்.

நன்றிக்கேடு - நன்றன்று:

கர்த்தர் செய்த நன்மைகளை மறந்துவிடப்பண்ணும் "நன்றிக்கேடு" பொல்லாத நோய்! இது தொடர்ந்து இருப்பதில்லை. விட்டு, விட்டு வரும் எனவே இதை வலிப்பு நோயுடன் நாம் ஒப்பிடலாம். தேவ உதவி கிடைக்கும் போது துதிப்பதும், அடுத்த தேவை உண்டாகும்போது முந்தின உதவியை மறந்து மீண்டும் முறு முறுப்பதும் இந்த நோய் முற்றிவிட்டதின் அறிகுறிகள் என் அருமையான தேவப்பிள்ளைகளே "நன்றிகேடு" மிகமோசமானநோய்" அன்று இஸ்ரவேலரை அழைத்து வந்த தேவனுடைய மனம் எப்படியிருந்திருக்கும் என்பதை நினைத்துப்பார்ப்போம். இன்றும் முறு-முறுக்கின்ற நம்மைப்பார்த்து தேவன் அப்படியே துக்கப்படுவார். கொஞ்சம் காலம் தான், மாயையான வற்றை இச்சிக்காமல் பரலோகத்தை நினைத்து அவரை துதித்துக்கொண்டே இருப்போம்.

நன்றிக்கேட்டை அழிக்கும் மருந்து "துதி" ஒன்றுதான்.கர்த்தர் இதுவரை நமக்குச் செய்த எல்லா நன்மைகளையும் ஒன்றுவிடாமல் நினைத்து அவரைத்துதித்துக் கொண்டேயிருப்போமாக. நமது பிரச்சனைகளையும், தேவைகளையுமே பாத்திருந்தால் நமது நன்றி உணர்வு மறைந்துவிடும். தாவீது: கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன். அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும் (சங்.34:1). அவர் எப்போதும் தேவனைத் துதித்துக் கொண்டே இருந்தார். அவர் வாய்க்கு முறு-முறுக்க நேரமில்லை. நாமும் இவ்வழியை பின்பற்றுவோமாக.

வலிப்பு நோயைப்போன்ற இந்த முறுமுறுப்பு நம்மைத் தாக்காமல் காத்துக்கொள்ள கர்த்தரை உயர்த்தும் - துதி நம் வாயில் எப்போதும் இருக்கட்டும் தேவன் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் அவரைத் துதித்துக்கொண்டே இருப்போம். மரித்தவர்களாய் மௌனத்தில் இருப்போர் (இறங்குகிற) அனைவரும் கர்த்தரைத் துதியார்கள். நாமோ இது முதல் என்றென்றைக்கும்- கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்.


பின்னுரை: கர்த்தருடைய வருகையின் நாட்களை நாம் நெருங்கிவிட்டோம். எங்குதிரும்பினாலும் இயேசு சீக்கிரம் வரப்போகிறார் என்பதே குரலாக ஒலிக்கிறது. வேத வசனங்களின் நிறைவேறுதலின் வேகத்தைப் பார்க்கும்போது அந்தநாள் வர அதிக நாட்கள் இல்லை என்பதை உணர முடிகிறது.

**ஜான் T.சுந்தர்**

"நான் உயிரோடிருக்குமட்டும் கர்த்தரைத் துதிப்பேன்; நான் உள்ளவும் என் தேவனைக் கீர்த்தனம்பண்ணுவேன்" சங்கீதம் 146:2

# பாடம் -11 ஒற்றுமைக்கான தேவனுடைய அடித்தளம் - *Jerry Bates*

## God`s Platform for Unity -மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை




-சென்ற மாத இதழின் தொடர்ச்சி

3. ஒரே ஞானஸ்நானமும் ஒரே சரீரமும் உண்டு. அப்படியே சபையில் பிரவேசிக்க ஒரே வழிதான் உண்டு.

D. ஆனால் ஒருவர் சொல்லுகிறார். அந்த விதமான தீர்மானம் ஒன்றுபடுத்தாமல் பிரிவினையை உண்டாக்குகிறதென்று. இந்த ஒரே ஞானஸ்நானம் ஒற்றுமையே அல்ல பிரிவினையையே வளர்க்கிறதென்று.

2. புதிய ஏற்பாட்டிலே ஞானஸ்நானத்தைக்குறித்து சர்ச்சை சயில்லை.

ஒரே ஒரு கர்த்தர் மட்டுமே உண்டு. இது வேதாகமம் முழுமையிலும் சொல்லப்படுகின்ற மிகப் பெரிய உண்மை.

பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது. அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது. அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம் (1கொரி.8:6).

1. தேவன் எல்லாவற்றுக்கும் மேலாயிருக்கிறார். மிகவும் மேன்மையான நிலையில் தேவன் இருக்கிறார்.

2. தேவன் எல்லாவற்றின் மூலமும் இருக்கிறார். அவருடைய இரக்கத்தினால் எல்லாவற்றையும் தாங்குகிறார்.

இந்த மகா பெரிய உண்மைக்கும் உலகம் மறுவிளக்கம் கொடுத்திருக்கிறது.

1. நாம் தொழுது கொள்ளுகிற அதே தேவனை யூதர்களும் தொழுதுகொள்ளுவதால் அது சரியே.

2. முஸ்லீம்களும்கூட வித்தியாசமான பெயரைச் சொல்லி நாம் தொழுது கொள்ளுகிற தேவனையே தொழுதுகொள்ளுகிறார்கள்.

**நிறைவுரை**

1. சபையிலே பலதரப்பட்ட மக்கள் இருப்பார்கள்.

அ) சில கிறிஸ்தவர்கள் தவறான நம்பிக்கையில் திருப்தி கொண்டு தவறுகளை ஏற்றுக்கொள்வர்.

ஆ) சிலர் பக்குவமின்மையினால் பலவிதமான போதனையினால் அங்குமிங்கும் அலைபடுவர். ஆனால் நாம் அவர்கள் வளர்ந்து பக்குவமடைய அவர்களுக்கு உதவவேண்டும்.

இ) 1. வித்தியாசமான ஈவுகளே நாம் வெளிப்படுத்த வேண்டிய வேற்றுமையில் ஒற்றுமை, என்னவென்றால் நாம் அனைவருக்கும் வித்தியாசமான திறமைகள் உள்ளன. சபையை கிறிஸ்துவின் ஒன்றிணைந்த சரீரமாக வளரும்படி நாம் அதை பயன்படுத்த வேண்டும்.

2. எங்களுடைய வேண்டுகோள் ஒருவர் கிறிஸ்தவராக வேண்டுமென்பதே.

"தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்" சங்கீதம் 51:17



**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய சுவிசேஷகர்கள் (வாலிபர்கள்) தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும். இயேசு சொல்கிறார்:**



**"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" யோவான்12:26.தொடர்புக்கு :94435 58041**

### வேத அறிவுப்போட்டி எண் *173* ன் விடைகள்

1.பவுலுக்கு - 1கொ.1:11
2. நாகூம் - நாகூ.1:12
3. பவுல் - 2கொரி.9:10
4. ஆபகூக் - ஆபகூ.2:18
5. பவுல் - கலா.4:11
6. கூஷின் - செப்.1:1
7. கீழ்ப்படிந்திருக்க - எபே.5:24
8.மௌனமாக - சக.2:13
9. உடன்பட்டவர்கள் - பிலி.1:3

❑ **வெற்றிபெற்றவர்கள்**

1. T.ராஜாத்தி - கோம்பை
2. J.ஜான்ஸி - கோவை
3. Mrs.சாந்தாபழனி - தர்மபுரி
4. T.ஏஞ்சலின்நேசமலர்- மதுரை
5. A.ரெபேக்காள் - மதுரை
6. D.சாந்தாதேவி - தேனி
7. Mrs.ராஜம்மாள் - திருப்பூர்
8. அல்லிராணிகாட்வின்- சென்னை
9. S.M.தவமணிதேவி - திருப்பூர்
10. Tmt.ருக்மணி ஜெயசீலன் - தேனி
11. S.தங்கம் - கன்னியாகுமரி
12. K.மோகன் - குமாரபாளையம்
13. S.லதா - மல்லிங்காபுரம்
14. R.கஸ்தூரி - ஒட்டநத்தம்
15. கிரேஸ்பக்தர் - சென்னை
16. M.இராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
17. Dr.J.பேசில்தேவசகாயம் - மதுரை
18. Tmt.மரகதம் திரவியம் - கோம்பை
19. P.சரவணகுமார் - கோபி
20. Ira.எதிராசன் - சங்ககிரி
21. P.ரூத்பிரின்ஸ் - பாண்டமங்கலம்
22. V.அருணாசலம் - பாண்டமங்கலம்
23. சுதா (எ) தீபா - கொத்தமங்கலம்
24. எஞ்சலின் (எ) தங்கமணி - தண்ணீர்பந்தல்
25. M.அருள் பிரபு - மரவபாளையம்
26. P.லீதியாள் - கரூர்
27. M.சரணியா - பரமத்தி
28. P.மார்த்தாள் - சேலூர்

**தூங்கும் முன்பு தினமும் வேதம் வாசியுங்கள்**

### வேத அறிவுப்போட்டி எண் *174* ன் விடைகள்

1.சமாதானத்தை - கொலோ.1:20
2. நோத் - ஆதி.4:16
3. தேவ வசனம் - 1தெச.2:13
4. மோசே - யாத்.4:20
5. பவுல் - 2தெச.3:9
6. எட்டாம்நாள் - லேவி.12:3
7. ஆம் - 1தீமோ.5:3
8. ஏழு - எண்.12:15
9. ஒநேசிமு - 2தீமோ.1:165
10.என் வசனம் - உபா.32:2

❑ **வெற்றிபெற்றவர்கள்**

1. S.தங்கம்
2. S.கிரேஸ்பக்தர் - சென்னை
3. T.ஏஞ்சலின் நேச மலர் - மதுரை
4. T.ராஜாத்தி - கோம்பை
5. Ira.எதிராசன் - சங்ககிரி
6. A.ரெபேக்காள் - மதுரை
7. Tmt.மரகதம் திரவியம் - கோம்பை
8. V.வீரராகவன் - பரமத்தி
9. தேவிராஜசிங் - திருப்பூர்
10. J.ஜாய்ஸ் - ஆனைமலை
11. Dr.J.பேசில் தேவசகாயம் - மதுரை
12. M.ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
13. R.கஸ்தூரி - ஒட்டநத்தம்
14. D.சாந்தாதேவி - தேனி
15. C.ஜர்விஸ்சியாமளா - சீர்காளி
16. Mrs.ருக்மணிஜெயசீலன் - தேனி
17. Mrs.லங்காஜீவரத்னம் - சிவகாசி
18. Mrs.சாந்தாபழனி - தர்மபுரி
19. R.ஸ்டெல்லா இளமதி -எல்லிஸ்நகர்

'ஒரே வழி' வேதபாடம்

**The Master Course**

படிக்க விரும்புகிறவர்கள் இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி, ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள்

வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College**
**Post Box 5,**
**Batlagundu-624 202**
**S.INDIA**




## கள்ளப் போதனைகளை சமாளிப்பது

## Dealing With False Teaching *J.C.Choate*




குறிப்பாக பிரசங்கியாரும் அதே சமயத்தில் சபையிலுள்ள மற்ற நடத்துனர்களும், எல்லா விசுவாசிகளும் தங்கள் வாழ்க்கையில் சில கள்ளப்போதனைகளை எதிர்கொண்டு சமாளிக்க நேரிடும். நான் பிரசங்கியாரை குறிப்பிட்டுச் சொன்னதன் காரணம் என்னவென்றால் அவர் தொடர்ந்து பிரசங்கிக்கின்றார், பல சமயங்களில் தான் வசிக்கும் பகுதிகளிலும் பொதுவான இடங்களிலும் சென்று போதிக்க வேண்டியிருப்பதால் அவர் எல்லாவிதமான போதனைகளையும் எதிர்கொள்ள நேரிடுகிறதோடு பலவிதமான உபதேசங்களைக் குறித்தும் வினவப்படுகிறார். இந்த விதமானசூழ்நிலைகளில் அவர் என்ன செய்வார்? பொருட்படுத்தாமல் விட்டுவிடலாம், ஒத்துப்போகலாம் அல்லது பதில் அளிக்கலாம்.

முதலாவது நாம் கள்ள போதனை என்றால் என்னவென்று விளக்க வேண்டும். எந்த ஒரு போதனையும் வேதத்தின் போதனையோடு முரண்படுமானால் அதுவே கள்ளபோதனை. அது விசாலமான எல்லைகளை உள்ளடக்கியது. இயற்கையாகவே பல வித்தியாசப்பட்ட மதங்கள் இருப்பதனால் அப்படியாகும். ஆனால் ஒரு சராசரி பிரசங்கியார் கிறிஸ்தவ எல்லைக்குட்பட்டு அதிகமாக கள்ளப் போதனைகளை சமாளிக்க வேண்டியிருக்கும். ஏனென்றால் பொதுவாக அவர் கிறிஸ்துவை விசுவாசிக்கிற மக்கள் மத்தியிலே அதிக நேரம் இருக்க வேண்டியிருக்கும். ஆகவே அவர்களுடைய போதனைகளும் வேதத்தின் அடிப்படையிலே இருப்பதால் கிறிஸ்தவ சமுதாயம் என்று அழைக்கப்படுகிறவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல போதனைகளிலிருந்து அவருடைய போதனைகள் மாறுபட்டிருக்கும். அப்படி மாறுபட்ட போதனைகளை நம்புகிறவர்களும் பல கேள்விகளைக் கேட்பார்கள். இவையெல்லாவற்றிற்கும் சொல்ல வேண்டியது என்ன வென்றால் கர்த்தருக்கு ஒரு சபை உண்டு. ஒரே சபை அவராலே ஸ்தாபிக்கப்பட்டது, அதற்காகவே அவர் மரித்தார், அவரே அதன் தலைவர், இரட்சகர், கிறிஸ்துவே அதன் அஸ்திபாரம், அந்த சபை கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்து கொண்டதாயிருக்கிறது (மத் 16:18; அப் 20:28; கொலே 1:18; எபே 5:23; 1கொரி. 3:11; ரோமர் 16:16). கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவர்கள் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவால் அவருடைய சபையில் சேர்க்கப்படுகிறார் களென்று வேதவாக்கியங்கள் போதிக்கின்றன (மாற் 16-16; அப் 2:38,47).

இப்போது அந்த ஒரே சபையோடு கூட அநேக வேறு சபைகளும் இருக்கின்றன. அவைகளெல்லாம் மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்டு மனிதர்களுடைய பெயர்களைத் தாங்கி மனிதர்களுடைய போதனையின் படியே நடத்தப்படுகின்றன. மேலும் அநேக காரியங்கள் தவறான போதனை அடிப்படையிலேயே இருக்கிறது. இந்த சபைகள் இரட்சிக்கப்படுவதற்கு அநேக வழிகள் உண்டென்று போதிக்கின்றன. நீங்கள் நினைக்கின்ற எல்லாவற்றைப் பற்றியும் அங்கே போதிக்கப்படுகின்றன. பொதுவாக மக்கள் இவைகளை குறித்து எப்படி தெரிந்துவைத்திருக்க முடியும். இந்தத் தவறான போதனைகளைக்குறித்து அவைகள் தேவனுடைய வார்தைகளோடு ஒப்பிடப்பட்டு சத்தியம் தவறானவைகளுக்கு மேலானது என்பதை போதித்தாலொழிய, இந்த கள்ள போதனைகளுக்காக எந்த நேரமும் செலவிட வேண்டியுள்ளது என்ற உண்மை வருந்தத்தக்கது. ஆனாலும் அதிலிருந்து தப்ப வழியில்லை. நீங்கள் தப்பித்துக் கொள்ளாவிட்டால் மக்கள் தொடர்ந்து பொய்யானவர்களை நம்பிக்கொண்டிருப்பார்கள். எப்படியிருப்பினும் அநேகர் தொடர்ந்து நம்புவார்கள். ஆனாலும் சத்தியம் போதிக்கப்பட்டு பொய்யான போதனையைக் கண்டனம் பண்ணும்



## பயங்கரமான பாவம்

## Great Sin

*- M.Rajamani*




இமயமலையில் சிகரங்கள் உண்டு. அது மாதிரியான மலைப்பாங்கான பகுதிகளுக்கு செல்பவர்கள் உயரமான பாறைகளில் நின்று கீழே உற்று நோக்கிப் பார்ப்பது வழக்கம். அப்பொழுது சிலருக்கு மேலிருந்து கீழே விழுவதுபோல் தலைசுற்று, மயக்கம் ஏற்பம சிலர் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனை காரணமாக மன அழுத்தத்துடன் வருவார்கள். அப்பொழுது கீழே விழுந்து தற்கொலை செய்து கொள்வோம் என்ற எண்ணம் உருவாகும். இப்படி தவறி விழுந்து விட்டால் எழும்புகூட மிஞ்சாது. அவர்களது உடலை மீட்பதும் கடினமாக இருக்கும்.

இந்த பயங்கரத்தையும் விட ஒரு அதிபயங்கரம் ஒன்று உண்டு. அதுதான் பாவம் என்ற படுகுழியில் நாம் வீழ்வதாகும். பாவமான படுகுழி பள்ளத்தில் விழுந்தால் நித்திய வேதனை அடைவோம். அக்கினிக் கடலில் துடிப்போம் என்பதை மறந்து விடாதீர்கள். கொலை செய்தவர்கள் பிறதவறுகள் செய்தவர்கள் பலர் தங்கள் மனச் சாட்சியின் உறுத்துதலால் உந்தப்பட்டு வேதனை அநுபவித்து கொண்டிருப்பதை கண்கூடாக பல இடங்களில் காண்கிறோம். அநேகர் சிறைச்சாலைகளில் கண்ணீருடன் வாடிக்கொண்டிருக் கின்றனர். ஏன் இந்த நிலைமையை நாம் தருவித்துக் கொள்ளவேண்டும். ஏன் நாம் ஆத்திரத்துடன் செய்ல்பட்டு அழிவை தேடிக்கொள்ளவேண்டும். சிந்தியுங்கள்.

அன்புச் சகோதரனே சகோதரிகளே, அதே நேரத்தில் நாம் ஒழுக்கமுடன் வாழ்வதற்கும் நம்மை பாதுகாப்பதற்கும் வல்லமையுள்ள இயேசு கிறிஸ்து இன்றைக்கும் ஜீவனுள்ளவராய் இருக்கிறார். தேவனுடைய பலத்தகரம் பாவக்குழியில் நம்மை விழாதபடி தாங்கி நிலை நிறுத்த வல்லமையுள்ளதாய் இருக்கிறது. "என் கால்கள் வழுவாதபடிக்கு நான் நடக்கிற வழியை அகலமாக்கினீர்" (சங்.18:36). நம் மனம் சறுக்கும்போதெல்லாம் அவருடைய கிருபைகள் தாங்குகின்றது. "துதிக்கு பாத்திரராகிய கர்த்தரை நோக்கி கூப்பிடுவேன்; அதனால் என் சத்துருக்களுக்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவேன்" (சங்.18:3) இப்படியாக தாவீது தன் நம்பிக்கையை தெரிவிக்கிறார்.

அன்பானவர்களே! நாமும் பாவச் சேற்றில் சிக்கிவிடாதபடி நம்மை பாது காத்து கொள்வோம். சிறுமைப்பட்டவர்களுக்கு கர்த்தர் அடைக்கலமானவர். நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர். அவரிடமிருந்து பாவமன்னிப்பை பெற்றுக்கொள்வோம். பாவம் என்கிற படுகுழி பள்ளத்தில் விழுந்து விடாதபடி நம்மை பாதுகாத்துக்கொள்வோம். கர்த்தரே நம்மை எல்லா தீங்குக்கும் விலக்கிக் காப்பார்.



"பாவத்தின் சம்பளம் மரணம்;
தேவனுடைய கிருபைவரமோ
நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால்
உண்டான நித்தியஜீவன்"- (ரோமர் 6:23)

இவ்வழிகளிலெல்லாம் தேவன், நமது ஆவிக்குரிய தகப்பனாக நம்மோடிக்கிறார். நம்முடைய வாழ்வில் எது வந்தாலும் கவலையில்லை கிறிஸ்தவ தியாகி, ஸ்தேவானுடைய சம்பவத்தில், தேவனுடைய வலது பாரிசத்தில் அவன் பார்த்த ஒருவரை அவன் எவ்விதமாக வர்ணிக்கிறார் என்பதை உங்களால் நினைவுகூரமுடிகிறதா? அடுத்த ஒவ்வொரு வர்ணனையில், இயேசு உட்கார்ந்து கொண்ருடிப்பது போல சித்தரிக்கப் படுகிறார். ஆனால் ஸ்தேவான் கல்லெறியப்பட்டுக் கொண்டிருந்தபோது அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் நின்று கொண்டிருக்கிறதை அவன் பார்த்தான். ஸ்தேவானுடைய பாடுகளின் பங்கானது அவரை அவருடைய பாதத்தினிடத்திற்கு கொண்டு வந்ததுபோல் இருந்தது. அந்த உயிர்ப்புள்ள வர்த்தைச் சித்திரம் தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு, நாம் துன்பப்படும் போதெல்லாம் ஒரு அற்புதமான ஆறுதலளிக்கும் ஒன்றாகும்.

“அவர் எவ்வாறு உதவி செய்கிறார்?” சில அற்புதச் செயலின் மூலம் அல்ல, அவர் நடத்துகிற அற்புதங்கள் புதிய உடன்படிக்கையை அல்லது ஒரு புதிய தூதரை கொடுக்கும்படி எல்லைக்குட்பட்டதாயிருக்கிறது; ஆனால் அவருடைய மிகப்பெரிய நடத்துதல் காலங்களினூடே அவருடைய கிருபையின் நடத்துதலாயிருக்கிறது; மக்களையும்; அரசுகளையும், சூழ்நிலைகளையும், சம்பவங்களையும் அவர் கையாளும் விதம் அவருடைய பிள்ளைகளுக்கு சரீரப்பிர காரமாகவும் சிறப்பாக ஆவிக்குரிய பிரகாரமாகவும் நன்மையான காரியங்களை கொண்டுவரும்படிக்கே நடந்தேறியிருக்கிறது.


ஆகவே துன்ப நேரங்களில், அவர் அவருடைய மற்ற பிள்ளைகளின் இருதயங்களையும், கரங்களையும், உடமைகளையும் பயன்படுத்துகிறார். அவருடைய சபை, இவ்வுலகில் அவருடைய குடும்பம் - பிள்ளைகளுக்கு ஆறுதலையும், சரீர உதவியையும் கொடுக்கும்படிக்கும் மேலும் வேதனையை அனுபவிக்கின்ற உலகத்தின் மக்களுக்கும் கூட அவ்வாறு செய்கிறார். அவர் அரசுகளையும், மருத்துவர்களையும், மருந்துகளையும், தச்சர்களையும், ஆலோசகர்களையும் ஆறுதலிலும், இயற்கை தோற்றத்திலும் சிறிது சிறிதாக இந்த மக்களும், இந்த பொருட்களும் புதிய நம்பிக்கையை நம்பிக்கையிழந்த இருதயங்களுக்கு கொண்டு வரும்படிக்கு பயன்படுத்துகிறார். மக்கள் மறுபடியும் மகிழ்ச்சியடையவும், தங்கள் வாழ்வில் ஏற்பட்டிருக்கிற நன்மைக்காக நன்றி உணர்வடைவதற்கும் கற்றுக் கொள்கிறார்கள்.

யோபு அனுபவித்த நம்பிக்கையற்ற நிலையை அவர் கூறியபோது, “என் சுவாசம் ஒழிகிறது, என் நாட்கள் முடிகிறது; பிரேதக்குழி எனக்கு ஆயத்தமாயிருக்கிறது” என்றான். தேவன் சாத்தானின் தீங்கை மாற்றி, அதற்கு பதிலாக யோபுடைய வாழ்வை ஆசீர்வதிப்பதற்கு திரும்பியபோது அதை சமாதானத்தோடு அவன் அனுபவித்தான்.

தேவன், அவரை அல்லது சாத்தானை தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை மனிதனுக்கு அனுமதித்திருக்கிறார். எனவே எல்லா உபத்திரவங்களினூடே அவர் மேல் விசுவாசமுள்ளவர்களா யிருக்கும்படிக்கு அவரால் நம்மை தெரிந்தெடுக்க முடியாது மேலும் நம்மை நற்காரியங்கள் செய்யும்படிக்கும் அவரால் மாற்ற முடியாது ஆனால் எப்பொழுதும் போல் நமது கரத்தை அவர் கரத்தில் வைக்கிறோம், அவர் ரோமர்8:28-ல் வாக்குப் பண்ணியிருக்கிறதை நினைத்து நம்முடைய வாழ்வின் துக்கங்கள் நன்மையாக மாற்றப் பட்டிருக்கிறது என்பதையும் நாம் அறிகிறோம். அதுவே வாக்குத்தத்தம். அவர் அதை நிறைவேற்ற தவறமாட்டார்.

## முன்னானது மூன்று

| | | |
|---|---|---|
| மேன்மைக்கு | மு | தாழ்மை– நீதி.15:33 |
| அழிவுக்கு | ன் னா ன | அகந்தை– நீதி.16:18 |
| விழுதலுக்கு | து | மனமேட்டிமை– நீதி.16:18 |





போது உண்மையைத் தேடுவோர் இரட்சிக்கப்படுவார்கள். ஆகவே பிரசங்கியார் வேதாகமத்தினுடைய எல்லாப் போதனைகளையும் கற்று நன்கு அறிந்துகொள்ளும்படி படிக்க வேண்டும். குறிப்பாக அவர் சுவிசேஷத்தைக்குறித்தும் சபையைக் குறித்தும் தொழுகையைக் குறித்தும் இரட்சிப்புக்கேற்ற எல்லாவிதமான அடிப்படைபோதனைகள் குறித்தும் நன்கு அறிந்தவராக இருக்க வேண்டும். அப்போது மதசம்பந்தப்பட்ட பிரிவினை உள்ளவர்கள் போதிக்கின்ற பொய்யானபோதனைகளுக்கு வேதத்தின் அடிப்படையிலே பதிலளிக்க முடியும் அவருக்கு சத்தியத்திலே முழு நம்பிக்கையிருக்க வேண்டும். கள்ளபோதனைகளை எதிர்த்து சமாளிக்கின்ற சக்தி இருக்க வேண்டும். மேலும் மக்கள் சத்தியம் எது, தவறு எது, என்பதை குறித்து எந்த விதமான சந்தேகங்களை எழுப்பினாலும் அதற்குத் தெளிவான பதிலளிக்க வேண்டும்.

கிறிஸ்துவும் அப்போஸ்தலரும் கூட கள்ள போதனைகளை சமாளிக்க வேண்டியிருந்தது. தங்களை கிறிஸ்து என்று சொல்லிக் கொண்டவர்கள் கூட இருந்தார்கள். கர்த்தர் எச்சரித்தார். “அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள். ஏனெனில், கள்ளக்கிறிஸ்துகளும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்”(மத் 24:23-24). பவுல் எழுதுகிறார், “அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்” (ரோமர் 16:17-18). கொரிந்துவிலுள்ள சபையை பவுல் பின்வருமாறு வேண்டிக் கொள்கிறார்.“சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்” (1 கொரிந் 1:10). பவுல் கொலோசெயருக்கு சொல்லும்போது .“நீங்கள் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள்போல, மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து; தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்துபோகுமே” என்கிறார்(கொலே 2:20-22).

யோவான் பின்வருமாறு சொல்கின்றார்.“ பிரியமானவர்களே உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்”(1 யோவான் 4:1). கிறிஸ்துதாமே சொல்லுவதைக் கேளுங்கள், “மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்” (மத்.15:9). மேலும் அவர் சொன்னது. “ பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர்என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களைஅறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்” என்றார் (மத் 7:21-23).

ஆகவே கர்த்தரும் அப்போஸ்தலரும் பொய்யான போதனைகளுக்கு எதிராக நம்மை எச்சரிக்கின்றார்கள். ஏனென்றால் சத்தியத்திற்கு பதிலாக கள்ளபோதனைகளை ஏற்றுக்கொள்கிறவர்கள் தங்களை இழந்து விடுகிறார்கள் ஆகவே நாம் ஜெபத்தோடு கூட அப்படிப்பட்ட மக்களை, தவறுகளுக்கு எதிராக எச்சரித்து, அவர்கள் அதை நிராகரித்து தேவனுடைய வார்த்தைகளை நம்பி இரட்சிக்கும்படியாக அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

இதற்கான பதில், கள்ள போதனைகளை வெறுத்து மக்களை அதைக்குறித்த அறிவும் அந்த ஆபத்துகளை குறித்த எச்சரிப்பும் இல்லாதபடி விலக்கிவைப்பதல்ல. அதே சமயத்தில் உண்மையையும் பொய்யையும் கலந்து அதோடு ஒத்துப்போவதும் யாருக்கும் எந்த வகையிலும் பயன் தராது. பொய்யோடு கலக்கப்படுகின்ற சத்தியம் சத்தியமாகாது. அது யாரையும் இரட்சிக்க முடியாது.

கள்ள போதனைகளை சமாளிக்கையில் எப்பொழுதுமே அதைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருப்பதென பொருள்படுகிறதில்லை. அந்த தவறுகளை நாம் கையாளும் போது அந்த தவறில் இருப்பவர்களை மிக அசிங்கமான முறையிலோ அல்லது அவர்களை துணிந்து அழித்து விடவேண்டுமென்றோ, செயல்படுவது அல்ல. அவர்களை நாம்நேசித்து அவர்கள் இரட்சிக்கப்படும்படியாக தவறுகளை உணர்த்த வேண்டும். நாம் நினைப்பதே சரி என்ற கொள்கையில் உறுதியாயிருந்து தவறான போதனையிலிருப்பவர்கள், சொல்வதை கவனிக்கவே மாட்டேன் என்று பிடிவாதமாக இருக்ககூடாது. யாரையும் வேண்டாம் என்று தள்ளிவிடாதீர்கள். அதே சமயம் தேவனுடைய சத்தியத்தோடு அவர்கள் இரட்சிக்கப்பட என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்யுங்கள். ஆனால் சத்தியம் மட்டுமே ஒருவரை இரட்சிக்கவோ விடுதலை செய்யவோ முடியும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

## தோமாவின் சுவிசேஷம்



கி.பி.1945–ல் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் எகிப்தின் நதிக்கரைப் பகுதிகளில் ஆராய்ந்து கொண்டிருந்தபோது, அங்கே தோமாவினால் எழுதப்பட்ட சுவிசேஷம் கிடைக்கப்பெற்றது. தோமா இந்தியாவில் மட்டுமல்ல, எகிப்திலும், சீனாவிலும் சுவிசேஷப்பணி ஆற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. அவ்வாறு எகிப்தில் சுவிசேஷப்பணி செய்தபோது தோமா காப்டிக் மொழியில் சுவிசேஷத்தை எழுதினார். காப்டிக் என்பது எகிப்தில் வாழ்ந்த ஆதிக் கிறிஸ்தவர்கள் பேசிய மொழி. பார்வோன் காலத்தில் பேசப்பட்ட பண்டைய எகிப்திய மொழியை கிரேக்க எழுத்துக்களில் எழுதுவதற்கு காப்டிக் என்று பெயர். தோமாவின் சுவிசேஷத்தில் இயேசுவின் வரலாற்றுடன் இன்னும் சில அற்புதங்களும், இயேசுவின் பிரசங்கங்களில் அதிகப்படியாக 114 வசனங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது.



உலகத்திற்கு வழியை காண்பிக்கும்படியே இயேசு வந்தார். "அப்படியென்றால் தேவன் இந்த உலகில் உண்மையான வல்லமையற்றவராகயிருக்கிறார் என்று பொருள்படுகிறதா? அல்லது இங்கும் இப்போதும் நமக்கு என்ன நடக்கிறது என்பது பற்றி அவர் கவனிக்காதவராயிருக்கிறாரா? இல்லை, நிச்சயமாக இல்லை! ஆனால் தேவன் இயற்கை விபத்துகளை உலகில் இயங்கி வருகிற இயற்கை விதிகளை ஆச்சரியமான விதத்தில் மாற்றி போடப்போவதில்லை என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டியது அவசியமாயிருக்கிறது. சூழ்நிலைகள் சரியாக இருக்கின்றபோது சுழல் காற்று வரும்: சூழ்நிலைகள் சரியாக இருக்கின்றபோது கடும் புயல் காற்று வரும்; ஆம் சூழ்நிலைகள் சரியாக இருக்கின்றபோது ஆபத்தும் மரணமும் வரும்.

மற்ற துயரச்சம்பவங்கள் பாவத்தின் மூலம் மிக நேரடியாக ஏற்படுகின்றன. குழந்தைகள் தங்கள் பள்ளித் தோழர்களை கொலைசெய்யும் போதும், ஒரு இன மக்கள் மற்றொரு இனமக்களை கொலை செய்யும் போதும், குடியும் போதையும் நாசத்தையும் மரணத்தையும் கொண்டு வரும் போதும் கொடூரமான தாக்குதல் மனிதவர்க்கத்தின் மேல் பேரழிவை ஏற்படுத்துகிறது இந்த பாவத்தின் விளைவினால் இவ்வகையான அனைத்து கரியங்களும் ஏற்பட்டு நிலைகுலைய பண்ணிவிட்டது.

மனிதன் உலகத்தில் உருவாக்கி வைத்திருக்கிற குழப்பத்தை தேவன் மாற்றியமைக்க முடியாது, அவருடைய பிள்ளைகளை சபிக்கப்பட்டுள்ள பாவ உலகத்திலிருந்து அவர் நமக்காக ஆயத்தம் பண்ணிக்கொண்டிருக்கின்ற அந்த நிலையான வீட்டிக்கு கொண்டு செல்ல மட்டுமே அவர் வாக்குப்பண்ணக்கூடும்.

அதுவரை நாம் இங்கே தங்கியிருக்கவேண்டும். சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக அவர் நடத்துவார் (ரோம.8:28) என அவர் தம்மிடத்தில் அன்பு கூருகிற தம்முடைய பிள்ளைகளுக்கு வாக்குப் பண்ணியிருக்கிறார். யோபுவுக்கு தேவன் எல்லாவற்றையும் செய்திருக்கிறார் என சாத்தான் கூறுவதுபோல நாம் பாதுகாப்பின் வேலிக்குள்ளாக அடைக்கப்பட்டிருக்கிறோம் என அது அர்த்தமாகுமா? இல்லை, நாம் இந்த தீமையான உலகத்தின் ஒரு பாகமாக இருக்கிறோம். மேலும் துயரத்தையும், நேசிக்கப்பட்டவர்களின் அகால மரணத்தையும், வாழ்க்கை புயல்களையும், இயற்கை அழிவுகளையும் துக்கத்தையும் தொடர்ச்சியான மன வேதனையையும் நாம் மிக நன்றாகவே தாங்கக் கூடும்.

ஆனால் தேவன் அவருடைய ஆவியினால் நம்முடைய உள்ளான ஆவியில் நம்மை வல்லமையாய் பலப்படுத்துவது போல் நம்மை தாங்குவார் (எபே.3:16). நாம் நமது துன்பத்தின் நடுவே அவரிடத்தில் கொண்டுள்ள விசுவாசத்தில் நிலைத்திருந்தால், அவர் சாத்தானின் தீய வலிமை மிக்க ஆயுதங்களையும், அழிவையும் நமது வாழ்வினுள் நன்மையாக மாற்றுவார். "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று எபி.13:5-ல் அவர் வாக்குப்பண்ணியிருக்கிறார்.

தேவன் தம்மை "பரம பிதா"வாக வெளிப்படுத்துகிறார். நீங்கள் ஒரு பெற்றோராக இருந்து உங்களுடைய பிள்ளைகள் அழிவை அனுபவித்துக் கொண்டிருந்தால், நீங்கள் எங்கேயிருப்பீர்கள்? அவர்கள் உங்கள் பிள்ளையாய் இருக்கின்றபடியினால் அவர்களுடைய வேதனையைக் குறித்து மனவருத்தமும் ஒரு பெற்றோருக்குரிய அதிகமான துன்பத்தையும் உணர்வீர்கள் என்பதை அறிவீர்கள்; அவர்களை அவர்களுடைய துன்பத்திலிருந்து காப்பாற்றும்படிக்கு உங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்வீர்கள் என்பதை அறிவீர்கள்; நீங்கள் எப்போதும் அவர்களிடமே இருந்து, உங்களால் முடிந்த அளவு உதவி எந்த வழியிலும் ஆதரவுடனிருக்க தயாராக இருப்பீர்கள். உங்களுடைய பிள்ளை துன்பத்தில் இருந்தால், நீங்கள் எவ்வளவு உடைந்து போயிருப்பீர்கள் அவனுடைய பிரச்சனைகளுக்காக உங்களை குற்றப்படுத்தினாலும் அந்த பிரச்சனைகளை உங்களுக்கும் அவனுக்கும் இடையே வர அனுமதித்தாலும், அந்த நேரமே அவனுக்கு உதவும்படி அவனோடிருக்க அதிக விருப்பம் கொண்டிருப்பீர்கள்.

“நான் என்னால் தாங்கக் கூடாத துக்கத்தினால் நொறுக்கப்பட்டிருக்கிறேன். என் இருதயத்தில் இனி ஒருபோதும் சமாதானம் இருக்காதா?”

யோபுவைப் போல, நாம் அமைதியின் தேவனை குற்றப்படுத்தலாம். ஆனால் இந்தக் குற்றச்சாட்டு தவறாக உண்டாக்கப்பட்டிருக்கிறது. தேவனிடமிருந்து உண்மையான சமாதானமும் ஆறுதலும் கிடைக்கிறது. மேலும் நமது வருத்தம் அல்லது நாசத்தில் நமக்கு உதவும்படி நமது நடவடிக்கைகளுக்கு வழியை ஏற்படுத்துகிறது. அவருடைய வேதாகம வார்த்தைகளின் மூலம், அவர் நம்மோடு பேசுகிறார். அவருடைய அன்பை அவர் தெரியப்படுத்துகிறார். நன்மையான நேரங்களிலும் தீமையான நேரங்களிலும் அவரிடத்திற்கு வரும்படி நம்மை அவர் அழைக்கிறார்.

தேவன் இவ்வுலகை ஆறாவது நாள் உண்டாக்கி முடித்தபோது, உலகத்திற்கு வேத வசனங்கள் என்ன கூறுகிறது என்பதை நினைத்துப் பார்ப்பீர்களா? “அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; (ஆதி.1:31). தேவன் உண்டாக்கிய இவ்வுலகத்தில் நாசத்தை தீங்கை வருத்தத்தை மரணத்தை சேர்த்து உண்டாக்கவில்லை. இது நேர்த்தியாகவும், அழகாகவும் இருந்தது - “தேவன் இருப்பாரானால்” நாம் நினைக்கிற காரியம் நிச்சயமாக இருக்கும்.

விரோதியானவன் இருக்கிறான், முதலாவதாக அவன் தேவனுடைய விரோதியாக இரண்டாவதாக சிருஷ்டிப்பின் விரோதியாக இருந்தபோதிலும் அவர் அதிகமாக நேசிக்கிறபடியால் அவர் அவருடைய ஒரேபேரான குமாரனை நமக்காக மரிப்பதற்கு அனுமதித்தார். அந்த விரோதியானவன் பிசாசு. உலகத்திற்குள் பாவத்தைக் கொண்டு வந்தவன் அவனே. மேலும் பாவமானது சிருஷ்டிப்பின் சகலவற்றையும் உருக்குலைக்கவும் அழிக்கவும் தக்கதான குழப்பத்திற்குள்ளாக்கியிருக்கிறது. “அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக் கொள்ளும்..... அந்தச் சிருஷ்டியானது கீழ்ப்படித்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப் படுகிறது” (ரோம.8:20-22).

யோபு அவனுடைய அனைத்து வேதனைக்கும் காரணம் யார் என்று அறிந்து கொள்ளாமல் அவன் தேவன் இதற்குக் காரணம் என தவறாக நினைத்தான். ஆனால் வேதாகமம் ஆதிமுதற் கொண்டே இதற்கான காரணம் சாத்தான், அவனே யோபுவை தாக்கிக் கொண்டிருந்தவன், தொடந்து அவனை அழிக்கும்படிக்கு, புயலையும், எதிர்பாராத அழிவையும் கொண்டுவரும்படி இயற்கையை பயன்படுத்திக் கொண்டிருந்தவன் சாத்தான் எனக்கூறுகிறது.

நம் உலகத்தில் பல இயற்கை அழிவுகள் இன்று நேரிடுகிறது. ஒரு குறிப்பிட்ட அழிவிற்கு காரணம் சாத்தான் அல்லது பாவத்தின் மூலம் உலகத்தில் நுழைந்துள்ள இயற்கை விதிகளின் விளைவு என நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ நாம் எல்லா பிரச்சனைகளையும் அவனிடமே சாட்டிவிடுவோம். அவன் தேவனுடைய எதிரியாகவும் மனிதனின் எதிரியாகவும் அவனுடைய எண்ணம் நம்மை அழிப்பதற்காகவே இருக்கிறது.

“ஆனால்,” நீங்கள் கேட்கலாம், “தேவன் எல்லா வல்லமையையும் உடையவராயிருந்தால், ஏன் அவர் சாத்தானை உலகத்திற்குள் இப்படிப்பட்ட கொடூரமான காரியங்களைக் கொண்டுவரும்படிக்கு அனுமதிக்கிறார்? ஏனென்றால் மனிதன் பாவத்தை தெரிந்தெடுத்த போதும், தொடர்ந்து பாவத்தை தெரிந்தெடுக்கிற போதும், சாத்தானை “இவ்வுலகத்தின் அதிபதியாக” உருவாக்குகிறான். “நீதிவாசமாயிருக்கும் புதிய வானங்களுக்கும் புதிய பூமிக்கும் வழியை ஏற்படுத்தும்படிக்கு இயேசுவந்தார். ஒவ்வொன்றும் மறுபடியும் மிக நல்லவையாக இருக்கப்போகின்ற அந்த உலகத்தில் இது இருக்கும். மேலும் நாம் அவரை பின்பற்ற ஆயத்தமாயிருக்கின்றோ மென்றால் அந்த





# ஊழியருக்கேற்ற மனைவி
## A Proper Wife for A Minister

*J.Glory Arjunan*



அன்பான சகோதரிகளே, உங்களது கணவன் கிறிஸ்துவை அறிவிக்கும் ஒரு ஊழியரா? அப்படியென்றால் கிறிஸ்துவை அறிவிக்கும் நற்பணியில் உங்கள் கணவரோடு கூட உங்களுடைய பங்கு என்ன? உங்களுடைய கணவருக்கு ஏற்ற மனைவியாக செயல்படுகின்றீர்களா? உங்கள் கணவரோடு கூட சபையைக் கட்டும்பணியில் உங்களுடைய முயற்சி, மற்றும் ஈடுபாடு எவ்விதம் உள்ளது? சற்றுசிந்தியுங்கள்.

அன்று இயேசுகிறிஸ்து சுவிசேஷத்தை அறிவிக்கும் பணிக்கு சீஷர்களை அனுப்பியபோது இரண்டு இரண்டு பேராக அனுப்பினார்.

தேவன் மனுஷனை உண்டாக்கியபோது மனுஷன் தனிமை யாயிருப்பது நல்லதல்ல, அவனுக்கு ஏற்ற துணையை உண்டாக்குவேன் எனக்கூறி ஏவாளை ஏற்றதுணையாக உண்டாக்கினார். இன்றும் அவருடைய பணியைச் செய்ய, அவருடைய சபையைக் கட்ட, வேதவசனங்களைப் பகிர்ந்து கொள்ள கணவனோடு கூட சேர்ந்து, ஊழியருக்கு ஏற்ற மனைவியாக செயல்பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அவ்விதமாக செயல்பட்ட அருமையான தம்பதியர்கள் வேதத்தில் அநேகருண்டு.

அதில் ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் என்ற தம்பதியர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் எவ்விதமான ஊழியத்தை செய்தார்கள் எனப்பார்க்கும்போது “அவன் (அப்பொல்லோ) ஜெப ஆலயத்தில் தைரியமாய்ப் பேசத் தொடங்கினபோது, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்” (அப்.18:26). அன்பான சகோதரிகளே, இந்த பிரிஸ்கில்லாள் எத்தனை ஆர்வமாக தான் கண்டுகொண்ட தேவனுடைய மார்க்கத்தை தன் கணவனோடு கூட அதிக திட்டமாய் விவரித்து காண்பித்து ஊழியனுக்கு ஏற்ற மனைவியாக வாழ்ந்திருக்கிறாள்! இன்றைய நாளில் ஊழியரின் மனைவியாக இருக்கிற நீங்கள் இவ்விதமாக உங்கள் கணவரோடுகூட ஊழியத்திற்குச் சென்று தேவனுடைய மார்த்தை விவரித்துக் காண்பிக்கிறீர்களா? அல்லது சாக்கு போக்குச் சொல்லிக் கொண்டு உங்களுடைய பிள்ளைகள், உங்களுடைய குடும்பம் மட்டுமே பெரிதென நினைத்து தேவனுடைய மார்க்கத்தை அறியாத பல கோடி மக்களைக் குறித்த கரிசனை இல்லாமலிருக்கிறீர்களா? நாமும் நம் குடும்பமும் மட்டும் இரட்சிக்கப்பட நினைப்பது தன்னலம். வேத வசனம் கூறுகிறது, “அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக” (பிலி.2:4) என்று. ஆனபடியினால் அழிந்து போகின்ற ஆத்துமாக்களை அக்கறையுடன் நோக்குவோமா?

இவர்களைப்போலவே சகரியா, எலிசபெத் என்ற இன்னொரு தம்பதியரும் உண்டு. “அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்” என லூக்.1:6-ல் வாசிக்கிறோம். இவர்கள் தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாய் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியும் நடந்து தேவனை

மகிமைப்படுத்தியிருக்கிறார்கள். அன்பான சகோதரிகளே, நமது வாழ்வில் அவருடைய கட்டளைகளின் படி நடந்து தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாக காணப்பட வேண்டும். இவ்விஷயத்தில் தேவனுக்கு முன்பாக பொய்சொன்ன அனனியா சப்பிராளை நன்கு அறிவீர்கள். அவர்களுடைய கதி என்னவாயிற்று ஒரே நாளில் இருவரும் மரித்தார்கள். இவைகள் எல்லாம் நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டுள்ளது. அப்போஸ்தலனாகிய பவுல் கூறும் வார்த்தையை கவனியுங்கள். “சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ” (1கொரி.9:16). இது நற்செய்தியை அறிவிக்கவேண்டிய காலம். நற்செய்தி அறிவிக்காவிட்டால் குற்றம் நம்மேல் சுமரும். ஊழியத்திற்கு தடையாய் இல்லாதபடி கர்த்தருடைய சபை கட்டப்பட புத்தியுள்ளவர்களாக மேற்கண்ட பிரிஸ்கில்லாள், எலிசபெத் போன்றோரைப் போல கர்த்தருடைய ஊழியத்தை செய்துவரும் உங்கள் கணவருக்கு ஏற்ற மனைவியாக செயல்பட துவங்குங்கள். கர்த்தர் தாமே உங்களுக்கு உதவி செய்வாராக!



सत्यमेव जयते

## தேசிய சின்னம்

### (National Emblem)

**நமது தேசிய சின்னம் சாரநாத்திலுள்ள அசோகர் தூணின் மேல் பகுதியில் காணப்படும் அசோக சின்னமாகும். இதில் நான்கு சிங்கங்கள் நான்கு திசைகளை பார்த்தபடி உள்ளன. இதன் அடிப்பாகத்தில் ஒரு எருதுவும், குதிரையும் இந்த இரண்டிற்கும் நடுவில் அசோகச் சக்கரமும் உள்ளன. அதன் கீழ் சத்யமேவே ஜயதே (வாய்மையே வெல்லும்) என்று பொறிக்கப் பட்டுள்ளது. “சத்யமேவ ஜயதே’ என்ற வாக்கியம் உபநிடதத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. நமது தேசியச் சின்னம் 1950 ஜனவரித் திங்கள் 26–ம் நாள் ஏற்றுக்கொள்ளப் பட்டது.**

**வாசகர் கடிதம்**

கர்த்தருக்குப் பிரியமான சகோதரர் அவர்களுக்கு R.இராதாகிருஷ்ணன் எழுதும் கடிதம் நலம் நலமறிய ஆவல்.

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்துவ மாத இதழி ஜனவரி 2015 அனுப்பி வைத்தமைக்கு மிக்க நன்றி. மாத இதழில் உள்ள தேவ செய்திகள், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி, சிறுவர் பகுதி, வேதஅறிவுப்போட் எனக்கு இந்த புத்தாண்டில் கிடைத்த பரிசு ஆகும். மாத இதழை தொடர்ந்து அனுப்பிவையுங்கள். தேவனுக்கு கோடானகோடி ஸ்தோத்திரம் செலுத்துகிறேன்.

"ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்துபோவார்கள்; அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்" நீதிமொழிகள் 11:14

எனக்காக ஜெபியுங்கள்! ஆலோசனை வழங்கவும். நன்றி. தேவ கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக!

அன்புடன்,

R.இராதாகிருஷ்ணன், கரசமங்களம், வேலூர் மாவட்டம்

---

கிறிஸ்து இயேசுவுக்குள் பிரியமான சகோதரர் அவர்களுக்கு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

தமிழன் தொலைக்காட்சியில் திங்கள் தோறும் காலை 6.00 மணிக்கு ஒளிப்பரப்பாகும் "கிறிஸ்துவின் வசனம்" நிகழ்ச்சிகளை குடும்பத்தோடு பார்த்து தேவ ஆசீர்வாதத்தை பெறுகிறோம்.

கிறிஸ்துவின் அடிச்சுவட்டை பின்பற்றி நடக்க, நல்ல கிறிஸ்தவர்களாக வாழ, எச்சரிக்கையான, வளர்ச்சிக்கான, வழி நடத்தலுக்காக மிகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வேலூரில் எனது மகள் மருமகன் இருக்கிறார்கள் அவர்களுக்கு "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" புத்தகத்தையும் அஞ்சல் வழி பாடங்களையும் அனுப்பி உதவுமாறு தங்களை அன்புடன் வேண்டுகிறேன். கிறிஸ்துவின் சபையாருக்கு எனது வாழ்த்துக்கள்.

அன்புடன்,

V.ஞான செல்வம், சென்னை




**பெண்கள் பகுதி**

## தேவன் ஏன் எனக்கு இதைச் செய்தார்?

### Why Did GOD Do This To Me?

-Betty



"சென்று போன மாதங்களிலும், தேவன் என்னைக் காப்பாற்றி வந்த நாட்களிலும் எனக்கு உண்டாயிருந்த சீர் இப்பொழுது இருந்தால் நலமாயிருக்கும். அப்பொழுது அவர் தீபம் என் தலையின் மேல் பிரகாசித்தது; அவர் அருளின வெளிச்சத்தினால் இருளைக் கடந்துபோனேன். தேவனுடைய இரகசியச் செயல் என் கூடாரத்தின் மேல் இருந்தது. அப்பொழுது சர்வ வல்லவர் என்னோடிருந்தார்; என் பிள்ளைகள் என்னைச் சூழ்ந்திருந்தார்கள். என் பாதங்களை நான் நெய்யினால் கழுவினேன்; கன்மலைகளிலிருந்து எனக்காக எண்ணெய் நதிபோல் ஓடி வந்தது; அந்தச் செல்வ நாட்களின் சீர் இப்போதிருந்தால் நலமாயிருக்கும்" (யோபு29:2-6).

"ஆகையால் இப்போது என் ஆத்துமா என்னில் முறிந்து போயிற்று; உபத்திரவத்தின் நாட்கள் என்னைப் பிடித்துக்கொண்டது. இராக்காலத்திலே என் எலும்புகள் துளைக்கப்பட்டு, என் நரம்புகளுக்கு இளைப்பாறுதல் இல்லாதிருக்கிறது.

“உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; நீர் எனக்கு மறு உத்தரவு கொடாதிருக்கிறீர்;.... என்மேல் கொடூரமுள்ளவராக மாறினீர்; உம்முடைய கரத்தின் வல்லமையால் என்னை விரோதிக்கிறீர்.... நன்மைக்குக் காத்திருந்த எனக்குத் தீமை வந்தது; வெளிச்சத்தை வரப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு இருள் வந்தது. என் இருதயம் குழம்பிற்று அமராதிருக்கிறது. உபத்திரவநாட்கள் என்மேல் வந்தது. வெயில் படாதிருந்தும், நான் கறுகறுத்துத் திரிகிறேன்; நான் சபையில் எழுந்திருந்து உதவிக்காக அலறுகிறேன்" (யோபு30:16,17; 20,21;26-28).

“மாறுபாடானவனுக்கு ஆபத்தும், அக்கிரமச் செய்கைக்காரருக்கு ஆக்கினையுமல்லவோ கிடைக்கும். அவர் என் வழிகளைப் பார்த்து, என் நடைகளையெல்லாம் எண்ணுகிறார் அல்லவோ?" (யோபு31:3,4).

“என்னைப் பகைக்கிறவனுடைய கோபம் என்னைப் பீறுகிறது, என்பேரில் பற்கடிக்கிறான்; என் சத்துரு கொடிய கண்ணினால் என்னைப் பார்க்கிறான்.... நான் சுகமாய் வாழ்ந்திருந்தேன்; அவர் (தேவன்) என்னை நருக்கி, என் பிடரியைப் பிடித்து, என்னை நொறுக்கி என்னைத் தமக்கு இலக்காக நிறுத்தினார். அவருடைய வில்லாளர் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள்; என் ஈரலைத் தப்பவிடாமல் பிளந்தார்; என் பிச்சைத் தரையில் ஊற்றிவிட்டார். நொறுக்குதலின் மேல் நொறுக்குதலை என் மேல் வரப்பண்ணினார் (யோபு16:9,12-14).

"ஒரு மனுபுத்திரன் தன் சிநேகிதனுக்காக வழக்காடுகிறது போல, தேவனோடே மனுஷனுக்காக வழக்காடுகிறவர் ஒருவர் உண்டானால் நலமாயிருக்கும்!

“குறுகின வருஷங்களுக்கு முடிவு வருகிறது; நான் திரும்பி வராதவழியே போவேன். என் சுவாசம் ஒழிகிறது, என் நாட்கள் முடிகிறது; பிரேதக் குழி எனக்கு ஆயத்தமாயிருக்கிறது” (யோபு16:21,22;17:1).

ஆத்ம வேதனையில் மனித சுபாவமுள்ளவர்கள் அடிக்கடி எதிர்பாரத சம்பவத்துக்குள்ளாகும்போது யோபு பல ஆண்டுகளுக்கு முன் பல வார்த்தைகளினால் கதறினது போல் கதறுகின்றனர். “தேவன் எங்கே” “ஏன் அவர் இதை எனக்குச் செய்தார்?” “நான் தீயவன் அல்ல - இது எனக்கு ஏற்றதா!” “ஏன் தேவன் எனக்கு செவிகொடுத்து என் வேதனையை போக்குகிறதில்லை?”